AIDS InfoNet

www.aidsinfonet.org

Fact Sheet Number 502

# கிரிப்டோஸ்போர்டியாசிஸ்
# Cryptosporidiasis

**கிரிப்டோஸ்போர்டியாசிஸ் என்றால் என்ன?**

கிரிப்டோஸ்போர்டியாசிஸ் ஓர் ஒட்டுண்ணியால் ஏற்படக்கூடிய நோயாகும். ஒட்டுண்ணியானது பிற உயிர்களிடமிருந்து தனக்கு தேவையான சத்துக்களை எடுத்துகொள்ளும் (விருந்தளிப்பவர்) அவ்வுயிரி (ஒட்டுண்ணி) உங்களது உடம்பில் இருந்தால் நீங்கள் விருந்தாளியாக இருப்பீர்கள். கிரிப்டோஸ்போர்டியாசிஸ் பெரும்பாலும் குடலை பாதித்து வயிற்றுப்போக்கை உண்டாக்கி விடும்.

கிரிப்டோ எளிதாக அத் தொற்றுள்ள மனிதனிடமிருந்தோ, விலங்கிடமிருந்தோ பரவும். HIV தொற்றுளோரிடம் கரு முதல் 20 % மக்களிடம் கிர்ப்டோ தொற்று காணப்படுகிறது அதில் சிலருக்கு மட்டுமே அதிக பிரச்சினையுள்ள வியாதிகளை கொண்டு வருகின்றது.

கிரிப்டோ அதிகமாக வயிற்றுபோக்கை அதனோடு வண்டி வருவது போன்ற உணர்வு, அடி வயிற்றுவலி. ஆரோகியமான நோய் எதிர்ப்பு நிலை உள்ளவர்களுக்கு இவ் வறிகுறிகள் ஒரு வாரத்திற்கு மேலாக இருக்காது. வயிற்றுவலியை பற்றி தெரிந்து கொள்ள Fact sheet 554 ஐ பார்க்கவும்.

ஒருவரது நோய் எதிர்ப்பு நிலை மோசமாக இருந்தால் இப் பிரச்சனைகள் நீண்ட நாட்களுக்கு இருக்கும் அதாவது ஒருவரது CD4 எண்ணிக்கை 200 க்கு கீழ் போகும் பட்சத்தில் இந்த நிலை உண்டாகும்.நீங்கள் HIV ஆல் பாதிக்கப்பட்டிருந்தால் கிர்ப்டோ வினுடைய பிரச்சனைகள் நான்கு வாரத்திற்கு மேலாக பதிப்பு இருக்கும் இந்த நிலையில் உங்களுக்கு எயிட்ஸ் நிலையில் உள்ளதாக CDC நிறுவனம் வரையறுத்துள்ளது
.

வயிற்றுபோக்கு அதிகமாகும் பட்சத்தில் உங்களது உடம்பு உணவில் உள்ள சத்துகளை எடுக்க முடியாமல் போகிவிடுகிறது, இதனால் அதிகப்படியான எடைகுறைவு உண்டாகும். எடை குறைதலை பற்றி Fact sheet 519 ஐ பார்க்கவும்.

பிற தொற்றுகள் கூட இம்மாதிரி பிரச்சனைகளை உண்டாக்கும் அதனை உறுதி செய்ய உங்களது மருத்துவர் உங்கள் மலத்தினை பரிசோதிக்க கூறுவார்கள் அதில் ஒட்டுண்ணி அல்லது அதனுடைய முட்டை இருக்கிறதா என்று உறுதி செய்வார்கள். அதனால் "o" அல்லது "P" அதாவது முட்டை அல்லது ஒட்டுண்ணி சோதனை என்று கூறுவார்கள்.

**கிரிப்டோஸ்போர்டியாசிஸ் விடமிருந்து எப்படி பாதகாக்க முடியும் ?**

இது வரை கிரிப்டோஸ்போர்டியாசிஸ் தவிர்க்க மருந்துகள் ஏதும் இல்லை, சுத்தம் மட்டுமே இதிலிருந்து பாதுகாக்க கூடியதாகும், மனிதர்கள் மற்றும் விலங்குகளின் கழிவுகளிலிருந்து பாதுகாப்பாக இருப்பதே ஆகும். குழந்தைகளின் கழிவுகள் தாங்கும் துணிகளை கவனமாக கையாளவும் துணிகள் மற்றும் அழுக்கு துணிகளை கையாளும் பொழுதும் கவனம் தேவை, தோட்ட வேலை செய்த பின்பும், கழிவறைகளை பயன்படுத்திய பிறகும் கைகளை சுத்தமாக கழுவ வேண்டும். நீரருந்தும் பொழுதும் தண்ணீரை வீணாக்காமல் பார்த்துக்கொள்ளவும் ஏன்னெனில் அத் தண்ணீரில் மனித மற்றும் விலங்குகளின் கழிவுகளில் கிரிப்டோ கிருமி இருக்ககூடும்.

வளர்ந்து வரும் நாடுகள் மற்றும் அமெரிக்கா ஐக்கிய நாட்டின் சில நகரங்களில் குடிநீர் மாசடைந்து உள்ளது அதனை உங்களது நீர் வள ஆதார துறையை அணுகி தெளிவு படுத்தவும்.

அப்படி அதில் இருக்குமானால் மற்றும் உங்களது CD4 அளவு 200 க்கு கீழ் இருக்குமானால் கீழ் கண்ட குறிப்புகளை கவனிக்கவும் ; -

- குடிக்கவும் சமைக்கவும் உள்ள நீரை ஒரு நிமிடத்திற்கு அதிகமாக நன்கு கொதிக்கவைக்கவும் அல்லது
- கொதித்த குடிநீரை உபயோகிக்கவும் அல்லது
- வடிக்கப்பட்ட குடிநீரை பயன்படுத்தவும் - வீட்டு

A Project of the New Mexico AIDS Education and Training Center. Partially funded by the National Library of Medicine
Fact Sheets can be downloaded from the Internet at http://www.aidsinfonet.org

உபயோகத்துக்கு ஒரு மைக்ரோன் வடிகட்டியை பயன்படுத்தவும் அல்லது

- தேசிய அளவிலான அல்லது 53 மைக்ரோன் குறியீடு உள்ள வடிகட்டியை பயன் படுத்துவதன் மூலம் கிருமிகளின் முட்டையை அகற்றலாம்.
- கொதிக்கவைத்த குடிநீரை பயன்படுத்தவும், பாட்டில்களில் கிடைக்கும் குடிநீர் அவ்வளவு சுகாதாரமானதா என்று கூற முடியாது ஏனெனில் அதனை சரியாக சுத்திகரிக்கப்படாமல் போகுமானால்

மேலும் விபரங்களுக்கு CDC பாதுகாப்பு அட்டவணையை பார்க்கவும் [http://www.cdc.gov/hiv/resources/brochures/crypto.htm](http://www.cdc.gov/hiv/resources/brochures/crypto.htm).

**கிரிப்டோவை எவ்வாறு குணப் படுத்தலாம் ?**

இதுவரை கிரிப்டோ வுக்கு மருந்துகள் ஏதும் இல்லை. ஆனால் ART எடுப்பதன் மூலம் அதனுடைய அறிகுறிகளை குறைக்கலாம். நிட்டஸொனிக்கில்( Nitazoxanicle) என்ற மருந்தை FDA நிறுவனம் கிர்ப்டோவுக்கான மருந்தென அங்கீகரித்துள்ளது அதனை குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் பயன்படுத்தலாம் இதனை ART உடன் சேர்த்து கொடுப்பார்கள். பிற நோய்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட சில மருந்துகளையும் கிர்ய்ப்டோவுக்கு பயன்படுத்தலாம் மற்றும் பரோமோய்சின் (Paromomycin)(ஹுமட்டின்) மருந்துகளும் பயன்படுத்தலாம்.

நாம் கிரிப்டோ தொற்றை முற்றிலுமாக சரிசெய்யலாம் அதனால் உருவாகும் வயிற்றுபோக்கை கட்டுபடுத்துவதன் மூலம் இதற்காக இமொடியும், காவ்பெக்டடேட், பெப்டோ - பிச்மோல் (bismuth subsalicylate), டிங்சர் ஒபியம் மற்றும் அதற்கு ஒத்த தயாரிப்பு ஆகும்.

உங்களுக்கு வயிற்றுபோக்கு உண்டாகுமானால் அதிக திரவ உணவை எடுத்துக்கொள்ள வேண்டும் இதனால் உடம்பில் நீர் குறைவால் உருவாகும் பிரச்சனையை தவிர்க்கலாம் மற்றும் இழந்த உப்புகளை (எலோக்ட்ரோலய்ட்) ஈடு செய்யவேண்டும் சில திரவ உணவுகளில் எலோக்ட்ரோலய்ட் உள்ளது.

**முடிவுரை:**

கிரிப்டோஸ்போர்டியாசிஸ் ஓர் சாதாரண ஒட்டுண்ணி இவை மனிதன், மிருகம், மண் மற்றும் தண்ணீரில் காணப்படுகிறது இவை ஒருவரிடமிருந்து மற்றவருக்கு எளிதாக பரவும். மனிதர்களில் சாதாரணமான நோய் எதிர்ப்பு திறன் இருக்கும் பொழுது ஒரு வாரத்திற்கு வயிற்றுபோக்கை உண்டாக்கி விடும், CD4 எண்ணிக்கை 200 கீழ் உள்ளவர்களுக்கு இப் பிரச்சனை கூடுதல் நாட்களுக்கு நீடிக்கும்.

கிரிப்டோ விலிருந்து பாதுகாத்துக்கொள்ள அடிக்கடி கை கழுவுவதே சிறந்த வழியாகும். மற்றும் மாசுபட்ட நீரையோ அதனால் உண்டாக்கப்பட்ட ஐஸை தவிர்ப்பது நல்லது.. உங்கள் பகுதி நீரில் கிரிப்டோ இருக்குமானால் அதனை கொதிக்கவைத்து வடிகட்டி சமைக்க மற்றும் குடிக்க உபயோகிக்கவும்.
கிரிப்டோ வுக்கு சிறந்த மருந்தாக ART உடன் நைட்டாசோக்ஸைடு ( nitazoxide) சேர்த்து எடுப்பதாகும் தொடர் வயிற்றுபோக்கு இருக்குமானால் உடம்பில் நீர் குறைவால் உண்டாகும் பிரச்சனையால் பின்னர் அதிக பிரச்சனையாக உடல் எடை குறைய வாய்ப்புள்ளது.

***Reviewed June 20, 2010***